**உலகளாவிய**
ஹெச்.பி.வி
புற்றுநோய் தடுப்பு



# ஹெச்.பி.வி தடுப்பூசி குறித்து பெற்றோர்களின் தெளிவான புரிதலுக்காக

## மருத்துவர் பெற்றோர்களிடம் என்ன சொல்கிறர் என்பதை விட எப்படி சொல்கிறார் என்பது அதை விட முக்கியமானது.

மருத்துவர் தடுப்பூசி குறித்து பெற்றோர்களிடம் ஆலோசனை வழங்கும் விதத்தில் அவர்கள் தங்களின் பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது குறித்து உறுதி கொள்கிறார்கள்

**மற்ற தடுப்பூசிகள் போடுவது குறித்து வலியுறுத்துவது போன்று ஹெச்.பி.வி தடுப்பூசி போடுவது குறித்தும் வலியுறுத்த வேண்டும்**

நீங்கள் இப்படிக் கூறலாம்;-

உங்கள் மகளுக்கு 9 வயது ஆனவுடன் கருப்பை வாய் புற்றுநோய் மேலும் அதனுடன் தொடர்புடைய மற்ற புற்றுநோய்களில் இருந்தும் பாதுகாக்க தடுப்பூசி போடுவது அவசியம் இது அவளின் ஆரோக்கியத்திற்கு மிக அவசியமானது. நீங்கள் அவளை அவளது முதல் தடுப்பூசிக்கு எப்பொழுது அழைத்து வர முடியும்?

பெற்றோர்கள் தயக்கம் காட்டினாலோ அதுகுறித்து கேள்விகள் கேட்டாலோ, நீங்களே இவ்வாறு கேட்டு உரையாடலை ஆரம்பிக்கலாம்.

"இந்த தடுப்பூசி குறித்து உங்களுக்கு தயக்கம் ஏன்?
இந்த தடுப்பூசி குறித்து நீங்கள் அறிந்திருக்கீறீர்களா?"

## பெற்றோர்களின் கவலை மற்றும் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க கீழே கொடுக்கப்பட்டுள்ள பதில்களை நீங்கள் பயன்படுத்தலாம்

### என் மகளுக்கு ஹெச்.பி.வி தடுப்பூசி போடுவதற்கு அவசியம் என்ன?

ஹெச்.பி.வி வைரஸ் கிருமியிலிருந்து தங்கள் மகளை பாதுகாக்க அவளுக்கு ஹெச்.பி.வி தடுப்பூசி மிக அவசியமானது. அவள் வளர்ந்த பிறகு கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் நான்கு மற்ற புற்றுநோய்களில் இருந்தும் (தொண்டை, பிறப்புறுப்பு,பிறப்புறுப்பு துவாரம் ஆசனவாய்) பாதுகாக்க முடியும்.9-14 வயதில் கொடுக்கப்படும் தடுப்பூசி மிகுந்த பயனளிப்பதோடு உடலை பாதுகாப்பதிலும் பெரும்பங்கு வகிக்கும்.

### ஏன் சிறிய வயதில் ஹெச்.பி.வி தடுப்பூசி கொடுக்க வேண்டும்?

ஏனென்றால் 9-14 வயதில் கொடுக்கப்படும் தடுப்பூசி மிகுந்த பலன் கொடுக்கும். மற்றும் ஹெச்.பி.வி வைரஸ் கிருமியிடமிருந்து மிகுந்த பாதுகாப்பு கிடைக்கும். சரியான வயதில் கொடுக்கப்படும் ஹெச்.பி.வி தடுப்பூசி மிகுந்த பாதுகாப்பு அளிக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. அதே நேரம் பீந்தைய வயதில் எடுக்கப்படும் தடுப்பூசியினால் கிடைக்கும் பாதுகாப்பு குறைவே..

### எனது மகளுக்கு எத்தனை தடுப்பூசிகள் போட வேண்டிய அவசியம் உள்ளது?

9-14 வயது பெண்கள் 2 தடுப்பூசிகள் எடுக்க வேண்டும்.
நோய்களுடன் போராடும் திறன் குறைந்த மற்றும் எதிர்ப்பு சக்தி குறைவான குழந்தைகளும் ( ஹெச்.ஐ.வி கிருமித் தொற்று உள்ளவர்கள்) 15 வயதிற்கு மேற்பட்டவர்களும் 3 தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள வேண்டும்.

### ஹெச்.பி.வி தடுப்பூசி பாதுகாப்பானதா?

ஆமாம். டெட்டனஸ் தடுப்பூசி போல ஹெச்.பி.வி தடுப்பூசியும் எல்லா விதத்திலும் பாதுகாப்பானது.

100க்கும் அதிகமான நாடுகளில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான முறையில் ஹெச்.பி.வி தடுப்பூசி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி பாதுகாப்பானது என்பதற்கு அதிக எண்ணிக்கையில் சான்றுகள் உள்ளன.

CANCER FOUNDATION OF INDIA
FEDERATION OF OBSTETRIC AND GYNAECOLOGICAL SOCIETIES OF INDIA (FOGSI)
INDIAN ACADEMY OF PEDIATRICS ©

வழிமுறைகள்:-

## ஹெச்.பி.வி தடுப்பூசி எடுப்பதனால் ஏதேனும் பக்க விளைவுகள் உண்டா?

ஹெச்.பி.வி தடுப்பூசி எல்லாவிதத்திலும் பாதுகாப்பானது. மற்ற தடுப்பூசிகளைப் போலவே ஹெச்.பி.வி தடுப்பூசி எடுப்பதனால் காய்ச்சல். தலைவலி, தடுப்பூசி, போட்ட இடத்தில் வலி, தோல் சிவப்பு வரலாம்.
சில குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்ட பின்பு தலைசுற்றல் வரலாம் இதனால் தடுப்பூசி போட்ட பிறகு உங்கள் குழந்தைகளை குறைந்தது 15 நிமிடங்கள் உட்கார வைத்த பிறகே அனுப்புவோம்..

## ஹெச்.பி.வி தடுப்பூசி எடுத்துக்கொள்வதால் எனது பெண் குழந்தையின் எதிர்கால குழந்தைப்பேறு அமைவதில் பிரச்சனை வருமா?

இல்லை. ஹெச்.பி.வி தடுப்பூசி எடுத்துக் கொள்வதால் குழந்தைப்பேறு கிடைப்பதில் எந்தப் பிரச்சனையும் வராது. உண்மையில் கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் அது சம்பந்தப்பட்ட மற்ற பிரச்சனைகளில் இருந்து உங்கள் மகளை பாதுகாத்து குழந்தைப் பேறு அமைவதிலும் உதவி அளிக்கும்.

## ஹெச்.பி.வி வைரஸால் எந்த வகையான புற்றுநோய் வரும்?

ஹெச்.பி.வி அல்லது ஹ்யூமன் பாப்பில்லோமா வைரஸ் என்பது பொதுவாக காணப்படும். அது சில வகையான புற்றுநோய் உருவாக்குவதற்கு காரணமாய் அமையும் பெண்களுக்கு கருப்பை வாய், தொண்டை, ஆசனவாய், பிறப்புறுப்பு மற்றும் அதன் முகப்புப் பகுதியிலும் பாதிப்பு உண்டாக்கும்.
ஆண்களுக்கு தொண்டைஆசனவாய், ஆண்குறி உறுப்பிலும் புற்றுநோய் வரலாம்.

## உண்மையில் என் குழந்தைக்கு ஹெச்.பி.வி வைரஸ் பாதிக்க வாய்ப்பு உள்ளதா?

ஹெச்.பி.வி வைரஸ் மிக சாதாரணமானது தங்களின் வாழ்நாளில் ஏறத்தாழ அனைவரும் ஏதேனும் ஒரு சமயம் ஹெச்.பி.வி வைரஸால் பாதிக்கப்படலாம்.
சரியான நேரத்தில் கொடுக்கப்படும் ஹெச்.பி.வி தடுப்பூசி தங்களது மகளின் பிற்கால வாழ்வில் இந்த வைரஸ் கிருமியால் ஏற்படும் புற்றுநோயிலிருந்து பாதுகாக்க முடியும்.

## ஹெச்.பி.வி தடுப்பூசி (சிறந்தது) என்று உங்களுக்கு எப்படி தெரியும்?

ஹெச்.பி.வி தடுப்பூசி எல்லாவிதத்திலும் மிகச்சிறந்தது.
ஆஸ்திரேலியா இங்கிலாந்து மற்றும் எஸ்வீடன் போன்ற நாடுகளில் தடுப்பூசி அதிகம் கொடுக்கப்பட்டுள்ளதால், அங்கே கருப்பை வாய் புற்றுநோய் முந்தைய அளவை விட மிகவும் குறைந்துள்ளது. அதிக நாட்களுக்கு புற்று நோயைத் தடுக்கும் சக்தி ஹெச்.பி.வி தடுப்பூசிக்கு உள்ளது.

## ஹெச்.பி.வி தடுப்பூசி எவ்வளவு காலம் நீடிக்கும்?

ஹெச்.பி.வி தடுப்பூசி நீண்ட கால பாதுகாப்பை வழங்குகிறது என்பதற்கு போதுமான சான்றுகள் உள்ளன. தடுப்பூசி மூலம் வழங்கப்படும் பாதுகாப்பு காலப்போக்கில் குறைகிறது என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

## ஹெச்.பி.வி தடுப்பூசிக்காக நான் ஏதும் பணம் செலுத்த வேண்டி உள்ளதா?

(மருத்துவர்களுக்கான செய்தி:-
2023ல் இந்திய தடுப்பூசி திட்டத்தில் ஹெச்.பி.வி தடுப்பூசி சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உங்கள் மாகாணத்தில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டால் செலவே இல்லாமல் பெண்கள் தடுப்பூசி போட்டக் கொள்ளலாம்)

ஆம் தடுப்பூசிக்காக பணம் செலுத்த வேண்டி இருக்கும். இன்று ஹெச்.பி.வி தடுப்பூசி 3000 ரூபாயில் போட்டுக் கொள்ள முடியும். புற்றுநோய் வரும்பட்சத்தில் ஏற்படும் செலவை விட இது மிகக் குறைவு என்பது என் கருத்து.

## அவள் திருமணத்திற்குப் பிறகு தடுப்பூசி போட்டுக் கொள்ள முடியாதா?

திருமணத்திற்க்கும் தடுப்பூசிக்கும் சம்பந்தம் இல்லை. இது புற்றுநோயை தடுப்பதற்காக உள்ளது.
சிறு வயது மற்றும் முதல் உடலுறவு ஆரம்பிக்கும் முன்பு கொடுக்கப்படும் தடுப்பூசி மிகவும் பலன் அளிக்கும். மற்றும் அந்த வைரஸ் கிருமியிடம் இருந்து பாதுகாக்கும்.

## உங்கள் குழந்தைகளுக்கு ஹெச்.பி.வி தடுப்பூசி போடுவீர்களா?

ஆம், எனது பிள்ளைகளுக்கு (அல்லது பேரக்குழந்தைகளுக்கு) ஹெச்.பி.வி தடுப்பூசி போட்டிருக்கிறேன், ஏனெனில் அது பயனுள்ளது மற்றும் புற்றுநோய்க்கு எதிராக பாதுகாப்பை அளிக்கிறது. அல்லது எனக்கு 9-14 வயதுள்ள குழந்தைகள் அல்லது பேரக்குழந்தைகள் இருந்தால், எதிர்கால புற்றுநோய்களில் இருந்து அவர்களைப் பாதுகாக்க தடுப்பூசி போடுவேன்.

## நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஹெச்.பி.வி தடுப்பூசி கொடுப்பீர்களா?

உங்கள் கவலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் HPV தடுப்பூசி முற்றிலும் பாதுகாப்பானது என்று நான் அறிவேன். ஒரு மருத்துவராக, இந்தியாவில் ஒவ்வொரு 8 நிமிடங்களுக்கும் ஒரு பெண் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் இறப்பதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன், இது தடுக்கக்கூடியது. "9 மற்றும் 14 வயதிற்கு இடைப்பட்ட HPV தடுப்பூசி உங்கள் மகளுக்கு கர்ப்பப்பை வாய் மற்றும் பிற HPV புற்றுநோய்களுக்கு எதிராக சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது.

## எனது ஒரு நண்பரின் பெண்ணிற்க்கு (மகளுக்கு) தடுப்பூசி கொடுத்த பின்பு பக்க விளைவு ஏற்பட்டுள்ளது. அது குறித்து நான் கவலைப்படவேண்டியது இல்லையா?

நான் உங்கள் கவலையை அறிகிறேன். ஆனால் ஹெச்.பி.வி தடுப்பூசி எல்லாவிதத்திலும் பாதுகாப்பானது என எனக்குத் தெரியும்.
ஒரு மருத்துவர் என்ற முறையில் இந்தியாவில் ஒவ்வொரு 8 நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு பெண் கருப்பை வாய் புற்றுநோயால் இறக்கிறாள் என்பது என்னை மிகவும் கவலை கொள்ளச் செய்கிறது. அதைத் தடுக்க முடியும். 9-14 வயதில் உங்கள் மகளுக்கு கொடுக்கப்படும் தடுப்பூசி அவளை கருப்பை வாய் புற்று நோய் மற்றும் அந்த ஹெச்.பி.வி வைரஸ் கிருமி சார்ந்த மற்ற புற்று நோய்களில் இருந்தும் பாதுகாக்கும்.

## ஆதாரங்கள்


1. FOGSI Gynaecologic Oncology Committee. FOGSI GCPR Screening and Management of Preinvasive Lesions of Cervix and HPV Vaccination. [Internet]. 2018 Jan [cited 2023 Mar 14]. Available from: https://www.fogsi.org/wp-content/uploads/2018/03/FOGSI-GCPR-March-2018-final.pdf

2. Indian Academy of Pediatrics. IAP Immunization Schedule 2021 [Internet]. 2021 [cited 2023 Mar 14]. Available from: https://acvip.org/professional/columns/iap-immunization-schedule-2020-2021-table-form

3. Ngan HYS, Garland SM, Bhatla N, Pagliusi SR, Chan KKL, Cheung ANY, et al. Asia Oceania Guidelines for the Implementation of Programs for Cervical Cancer Prevention and Control. J Cancer Epidemiol [Internet]. 2011 Apr 13 [cited 2023 Mar 14];2011:794861. Available from: https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC3083000/

4. World Health Organization. Human papillomavirus vaccines (HPV) [Internet]. [cited 2022 Sep 16]. Available from: https://www.who.int/teams/immunization-vaccines-and-biologicals/diseases/human-papillomavirus-vaccines-(HPV)

5. World Health Organization. Cervical cancer [Internet]. 2022 [cited 2022 Sep 16]. Available from: https://www.who.int/news-room/fact-sheets/detail/cervical-cancer

6. National Cancer Institute. HPV and Cancer [Internet]. 2022 [cited 2022 Sep 16]. Available from: https://www.cancer.gov/about-cancer/causes-prevention/risk/infectious-agents/hpv-and-cancer

7. World Health Organization. Safety of HPV vaccines: Extract from report of GACVS meeting of 7-8 June 2017 [Internet]. 2017 Jul [cited 2022 Sep 21]. (Weekly Epidemiological Record). Available from: https://www.who.int/groups/global-advisory-committee-on-vaccine-safety/topics/human-papillomavirus-vaccines/safety

8. Centers for Disease Control and Prevention. HPV Vaccine Is Safe and Effective [Internet]. 2019 [cited 2022 Sep 21]. Available from: https://www.cdc.gov/hpv/parents/vaccinesafety.html

9. World Health Organization. Questions and Answers About Human Papillomavirus (HPV) [Internet]. 2020 [cited 2022 Sep 20]. Available from: https://cdn.who.int/media/docs/librariesprovider2/default-document-library/who-hpv-qa.pdf?sfvrsn=d0bf716b_3

10. Torjesen I. HPV vaccine cut cervical cancer rates in England by 87%. BMJ [Internet]. 2021 Nov 5 [cited 2022 Sep 21];37(n2689). Available from: https://www.bmj.com/content/375/bmj.n2689

11. Markowitz LE, Schiller JT. Human Papillomavirus Vaccines. J Infect Dis [Internet]. 2021 Oct 1 [cited 2022 Sep 21];224(Supplement_4):S367–78. Available from: https://doi.org/10.1093/infdis/jiaa621

12. Centers for Disease Control and Prevention. HPV Vaccine Safety and Effectiveness Data [Internet]. 2021 [cited 2022 Sep 21]. Available from: https://www.cdc.gov/hpv/hcp/vaccine-safety-data.html